# பாக்கியவான்!

பொருநை
நாகரீகம் தெரியுமான்னு
கேளுங்க

பொறாமை
நாகரீகம்
தான்
தெரியும் என்பார்..

கீழடி
தெரியுமான்னு
கேளுங்க

காலடி
மட்டுமே
தெரியும் என்பார்

எட்டுக்கால்
பூச்சிக்கு
பத்துக்கால்
என்பது போல்

“கம்பராமாயணம் எழுதியது
சேக்கிழார்”
என்பதை
கண்டறிந்த
ஆற்றலாளர்..

“தேர்ந்து”
எடுக்கப்பட்ட
முதல்வர்களுக்கு
மத்தியில்

“ஊர்ந்து”
எடுக்கப்பட்ட
ஒரே முதல்வர்

என்னும்
கல்வெட்டுக்கு
உரிய
கால பயில்வான்..

பத்துத்
தேர்தல்களில்
தொடர்ந்து
தோற்று
அரியர்களுக்கு
மாணவனாகி

இப்போது
அமித்ஷாவின்
சீடனாகி இருக்கும்

எடப்பாடி
என்கிற
மூதறிஞர் தான்..

இப்போது

பாதி பா.ஜ.க.
ஆகி விட்ட

அரை
நூற்றாண்டு
கால
அண்ணா
தி.மு.க.வுக்கு
முடிவுரை
எழுதி வருகிறார்
என்றால்

எடப்பாடி
பழனிச்சாமி



அன்னயாவினும்
புண்ணியம்
செய்த
பாக்கியவான்
அல்லவா...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித்
தொடர்புக்குழு துணைத்
தலைவர்

# அந்தோ! அந்தப் பிப்ரவரி மூன்றாம் நாள்!



பங்காரு நடராசர்
பாருக்குக் கொடுத்த கொடை
பொங்கும் கடலோரம்
போய்ப்புதைந்த நாள்இதுதான்!
ஆவி தமிழ்க்கென்றே
அவதரித்த உயிர்க்கனியைப்
பாவி கொடுங்காலன்
பறித்துவிட்ட நாள்இதுதான்!

நினைந்துவைத்த ஆர்வத்தால்
நெக்குருகி, இயற்கைத்தாய்
புனைந்துவைத்த
எழிற்கவிதைப்
பூ உதிர்ந்த நாள்இதுதான்!
புயல்கிளப்பித் தமிழ்நாட்டில்
பொழுதெல்லாம் கூவிவந்த
குயிற்பறவை சிறகொடுங்கிக்
கூடடைந்த நாள்இதுதான்!

வரம்கிடைக்கத் தவமிருந்து
வாய்த்ததுபோல், காதுகளில்
சுரம்வளர்த்த புதுக்குரலின்
சுருதிநின்ற நாள்இதுதான்!
வைத்திருந்த பற்றெல்லாம்
வளர்த்திருந்து, தமிழர்மேல்
மொய்த்திருந்த விழிக்கதவு
மூடிவிட்ட நாள்இதுதான்!

ஏடென்றும் எழுத்தென்றும்
ஏறுகின்ற மேடையென்றும்
ஓடாய் உழைத்தமகன்
ஓய்வெடுத்த நாள்இதுதான்!
ஆக்கத்தில் துணையிருப்பான்
அண்ணன்பல் லாண்டு,எனும்
ஏக்கத்தில் எல்லோர்க்கும்
இடிவிழுந்த நாள்இதுதான்!

வெயில்,மழையைப் பாராமல்
வீதியெங்கும் தமிழ்மணக்கப்
பயணம் தொடர்ந்தவனின்
பணிமுடிந்த நாள்இதுதான்!
இயக்கம்என்றே இயங்கிவந்த
எம்அண்ணா, தன்சுமையை
உயிர்க்கலைஞர் தோள்களிலே
ஒப்படைத்த நாள்இதுதான்!

தன்னைச் சுமந்துபெற்ற
தாய்,உயிரோ டிருக்கையிலே
மன்னன் புகழுடம்பை
மண்சுமந்த நாள்இதுதான்!
பொன்சுமந்த இதயமகன்
போனதெண்ணி விழிகளிலே
தென்னக நதியனைத்தும்
திரண்டுவந்த நாள்இதுதான்!

ஏ!தாழ்ந்த தமிழ்நாடே!
எனக்கொதித்த இனமீட்புத்
தூதுவனை ஐயகோ!
தொலைத்துவிட்ட நாள்இதுதான்!
ஈரா யிரம்ஆண்டு
இரவுகளின் உறக்கத்தை
“ஓர்இரவில்” கலைத்தமகன்
உறங்கிவிட்ட நாள்இதுதான்!

“ஆரியத்தின் மாயை”யினை
அம்பலப் படுத்தி,இருள்
வீரியத்தை விந்தியத்துக்
கப்பாலே விரட்டியநம்
சூரியனைக் காஞ்சிதந்த
சொக்கத்தங் கத்தை,மலர்த்
தேர்சுமக்கப் பொறுக்காமல்
பார்அழுத நாள்இதுதான்!

பத்திரமாய் அழைத்துவந்துப்
பயணத்தின் நடுவழியில்
தத்தளிக்க நம்மையெலாம்
தவிக்கவிட்டுப் போனவனைக்
கத்து கடற்கரைக்கே
கையளித்தோம் நாங்களென்று
தத்துஅளித்த நாள்இதுதான்!
தமிழ்துடித்த நாள்இதுதான்!

வையம் அழிந்தாலும்
வானிடிந்து வீழ்ந்தாலும்
மெய்நடுக்கம் கொள்ளாத
மேதகுநம் பெரியார்!ஆம்!
கை,தலையில் அடித்தபடி
கருஞ்சட்டை நனைந்தபடி
ஐயா பெரியாரே
அழுததுயர் நாள்இதுதான்!

எண்ணியதைச் செய்தவனை
இனஉணர்வை நெய்தவனை
அண்ணனை,நம்
உள்ளொளியை
அந்தோ! இழந்துவிட்டு
மண்ணில் திசையெட்டும
மக்களெல்லாம் விம்மிவிம்மிக்
கண்ணீர் மழைபொழிந்து
கதறியநாள் இதுவேதான்!

அன்றும் அழுதோம்நாம்!
அவர்நினைவு நாளினிலே
இன்றும் அழுவோமோ?
இல்லைஇல்லை!
விழியிரண்டில்
ஊற்றெடுக்கும் கண்ணீரை
ஒதுக்கிப் புறந்தள்ளி
ஆற்றல் மறவரெல்லாம்
அணிவகுத்துப் புறப்பட்டே,

“அண்ணா!நீ மூட்டியதீ
அணையவில்லை! அச்சுடரைக்
கண்ணாக விளங்கியநம்
கலைஞர்,பே ராசிரியர்
தன்னுரிமை கொண்டளித்தார்
“தளபதி”யின் கைகளிலே!
முன்,அவர் நடக்கின்றார்!
முழக்கமிட்ட படி,அவரைப்

பின்தொடரும் தம்பியரின்
பேரணி,உன் “சீரணி”யாம்!
வென்றிடுவோம்! மொழிப்ப
கையை
வேரறுப்போம்! இதுஉன்மேல்
ஆணை! தமிழ்த்தாய்மேல்
ஆணை! எமையீன்ற
மாணுறுசெந் தமிழ்நாட்டு
மண்மீதில் ஆணை!எனத்

தேடிவைத்தப் பேரறிவுச்
செல்வத்தை, அண்ணாவை
மூடிவைத்த கல்லறைக்கு
முன்நின்று சூளுரைப்போம்!
பொடிவைத்துக் கருத்துக்குள்
புதிர்வைத்து, மடமைக்கு
வெடிவைத்த நம்அண்ணா
வேறெங்கும் போகவில்லை!

கொடிவைத்து நமைக்காக்கும்
கொற்றவராம் “தளபதி”யின்
வடிவத்தில் நம்முன்னே
வாழ்கின்றார்! ஆள்கின்றார்!
ஆமாம் இருக்கின்றார்!
அண்ணன் சிரிக்கின்றார்!
நாமேன் அழவேண்டும்?
நடைபோடு செந்தமிழா!



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**

## ஒன்றிய பட்ஜெட்டில்

# நாட்டின் உண்மையான பிரச்சினைகள் புறக்கணிப்பு!


## ராகுல்காந்தி கருத்து!

புதுடெல்லி, பிப்.3 –

ஒன்றிய பட்ஜெட் இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளை புறக்கணித்துள்ளது. வேலைவாய்ப்புக்கு பட்ஜெட்டில் வழியே இல்லை. விவசாயிகள், ஏழை குடும்பங்கள் கண்டுகொள்ளப்படவில்லை என்று ராகுல்காந்தி குற்றம் சாட்டி உள்ளார்.

**ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தபட்ஜெட் குறித்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தியின் விமர்சனம் வருமாறு:**

202627 நிதியாண்டுக் கான மத்திய பட்ஜெட் இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளான வேலையின்மை, விவசாயி களின் துயரம், உறபத்தி சரிவை புறக்கணிப்பதாக உள்ளது. இளைஞர்கள் வேலை



வாய்ப்பின்றி இருப்பதையும், உற்பத்தி குறைந்து வருவதையும், விவசாயிகள் துயரத்தில் இருப்பதையும் பட்ஜெட்கண்டு கொள்ளவில்லை. ஏனெனில் இளைஞர்களுக்கு வேலை இல்லை. உற்பத்தி சரிந்து வருகிறது. முதலீட்டாளர்கள் தங்கள் மூலதனத்தை திரும்பப் பெறுகின்றனர். குடும்ப சேமிப்பு அதலபாதாளத்திற்குச் செல்கிறது. விவசாயிகள் துயரத்தில் உள்ளனர்.

இந்தியாவில் வரவிருக்கும் உலகளாவிய அதிர்ச்சிகள் இவை. இந்த பிரச்சி னைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. திசை மாற்றத்தை மறுக்கும், இந்தியாவின் உண்மையான பிரச்சினை களை புறக்கணிக்கும் ஒரு பட்ஜெட் என கூறினார்.

**மல்லிகார்ஜூன கார்கே கருத்து!**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே: பட்ஜெட் மந்தமானது, ஏமாற்றமளிக்கிறது. இந்தியாவின் உண்மையான பிரச்சினை களை கண்திறந்து பார்க்கவில்லை. மோடி அரசாங்கத் திடம் யோசனைகள் தீர்ந்துவிட்டன.

2026 பட்ஜெட் இந்தியாவின் பல பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களுக்கு ஒரு தீர்வைக் கூட வழங்கவில்லை. மிஷன் மோடு இப்போது சேலஞ்ச் ரூட் ஆகிவிட்டது. நிகர விளைவு: கொள்கை தொலை நோக்குப் பார்வை இல்லை, அரசியல் விருப்பம் இல்லை. இந்த பட்ஜெட் எந்தத் தீர்வுகளையும் வழங்கவில்லை, கொள்கையின்மையின்மையை மறைக்க முழக்கங்களைக் கூட வழங்கவில்லை என்றார்.

---

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை!

# குன்றத்தூர் நகர தி.மு.க. செயல்வீரர்கள் - பி.எல்.ஏ. 2 ஆலோசனைக் கூட்டம்!

## நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வரவேற்கிறார்!

காஞ்சிபுரம், பிப். 3-

காஞ்சிபுரம் குன்றத்தூர் நகர தி.மு.க செயல்வீரர்கள் மற்றும் BLA2, BLC, BDA, BYOஆலோசனைக் கூட்டம் 04.02.2026, புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் செங்குந்தர் திருமண மண்டபம் - குன்றத்தூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் நகர கழக அவைத்தலைவர் எம்.சங்கர் தலைமை வகிக்கிறார். நகர கழக செயலாளர், நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி வரவேற்கிறார்.

டி.கே.குமாரசாமி, டி.எஸ். கலைச்செல்வன், கே.கே.இராசமாணிக்கம், அ.தமிழ்மாறன், டி.திருநாவுக்கரசு என்.குணசேகர், க.வே.சிதம்பரம் ,ஆர்.கே. அபிபுன்னிசா என்.கருணாநிதி, ஜெ.மணிமாறன், த.கந்தசாமி, டி. என்.அருள்மொழி டாக்டர். செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், கழக பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு தலைவர் டி.ஆர்.பாலு எம். பி. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் படப்பை. ஆ. மனோகரன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம்,டி.எம்.உமாசங்கர், Dr.ஜி.பாபு, என்.பழனி , தி.வே.நமச்சிவாயம், எம்.குப்புசாமி ஜெ.முனுசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

பொருள்

11.02.2026, மாலை திருவிடந்தையில் முதல்வர் கலந்து கொள்ளும் மாநாடு 2 கழகத் தலைவர் அவர்களின் மார்ச் 1 ல் பிறந்த நாள் விழா 3 2026 சட்டமன்ற தேர்தல் பணி, கழக வளர்ச்சி பணி.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு கழக முன்னோடிகள், நகர செயற்குழு உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், BLA2, BLC, BDA, BYO மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நகரச் செயலாளர் கோ.சத்தியமுர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

குன்றத்தூர் நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கே.டில்லி பாபு நன்றி கூறுகிறார்.

---

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை!

# மாங்காடு நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப். 3-

மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

மாங்காடு நகரக் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் நாளை 04-02-2026 புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மாங்காடு R.K.அன்னைஅபிராமி திருமணமண்டபத்தில் நகர கழக அவைத்தலைவர் M.S.மகேந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சாரதி வரவேற்கிறார்.

எம்.ஆர்.சீனிவாசன் ஜி.ராமு. ஜி.எம். வில்லியம்ஸ், சுசீலா இராதாகிருஷ்ணன் கே.ஜி.சங்கர் ஆர். பாஸ்கரன், எம்.ஆர்.வெங்கடேசன், ஏ.கே. அப்துல்ரஹ்மான், எம்.எஸ். கதிரவன், டி.பெருமாள்ராஜ், சரளா விஜயகுமார், மருத்துவர் க.ராஜேஷ் ஜி.ஞானவேல், யு.செல்வராஜ் எஸ். நளினி ஏ.தம்பிதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் / மக்களவைக் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் படப்பை ஆ.மனோகரன் , K.G. பாஸ்கர்சுந்தரம், சாந்திசம்பத், ராம்பியாரிலட்சுமணன், சரிதாஞானவேல், க.மு.இஸ்மாயில், C.தனசேகர், மேனகாகணபதி, சரஸ்வதிசீனிவாசன், அனுசுயாசத்தியசீலன், மோசினாஅபிபுர்ரஹ்மான், யாஸ்மின்ஜபருல்லா,

உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். நகர மாணவரணி அமைப்பாளர் ம.வல்லரசு நன்றி கூறுகிறார்.

இதில் வார்டு கழக நிர்வாகிகள், வார்டு கழக அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், பூக்கமிட்டி உறுப்பினர்கள், வாக்குச்சாவடி இ-முகவர்கள் கழக முன்னோடிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்துத்த ருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1) 11.02.2026 அன்று திருவிடந்தையில் கழகத்தலைவர் பங்கேற்கும் BLA2,BLC,BDA,BYO மாபெரும் மண்டல மாநாடு 2)மார்ச்-1 கழகத்தலைவர் பிறந்த நாள் விழா 3)2026 சட்டமன்ற தேர்தல் பணி 4) கழக வளர்ச்சி பணி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பேரணி! சென்னை மண்டலத்திற்குட்பட்ட

# கழக அயலக அணியினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## மாநில துணைச் செயலாளர் பரிதி இளம் சுருதி எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, பிப். 3-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாள் மாபெரும் அமைதிப் பேரணி, தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி. கே.சேகர்பாபு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா, சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ , சென்னை வடகிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு M.C, சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலையில், இன்று (03/02/2026) காலை 7மணி அளவில் சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலையில் இருந்து புறப்பட்டு இந்த அமைதி பேரணி அண்ணா நினைவிடத்தில் முடிவடைகிறது.

இப்பேரணியில் சென்னை மண்டலத்துக்கு உட்பட்ட கழக அயலக அணி மாவட்டத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக அயலக அணி மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், கழக அயலக அணி பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் அனைத்து அயலக அணி நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்,


இவ்வாறு கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் சென்னை மண்டல அயலக அணி பொறுப்பாளர் பரிதிஇளம்சுருதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.எஸ். முருகேசன்

## பிப்ரவரி 3 (2004)



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# க. மாசிலாமணி

## பிப்ரவரி 3 (2015)



சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியில், வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் – சைதை கிழக்கு பகுதியின் அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**